# இலக்குவனார்க்குப் பாமாலை

# கருத்துக் கொத்து

## பேராசான் இலக்குவனார்

**பெருங்கவிக்கோ**

பேராசான் இலக்குவனார்பற்றிப் பாடுவோம்
—அந்தப்
பெருந்தகையர் கொள்கைவழி சென்று
கூடுவோம்
சீரார்ந்த தமிழின் மேன்மைநாளும்
எண்ணுவோம்—அந்தச்
சிங்கம் வாழ்ந்த ஊக்கமுடன் செயல்கள்
—பண்ணுவோம்
எந்த மொழிக்கும் எம்மின் மொழி அடிமையும்
அல்ல
எங்கள் தமிழ் பிறரைஆள எண்ணமும் இல்லை
செந்தமிழ்நம் மொழியை அடிமை ஆக்க
நினைப்போர்
செயல் மறுப்போம் துணிந்து செய்தால்
சிரமும் அறுப்போம்
தமிழர் நாட்டில் தமிழ் மொழியை தாழ்வு
செய்பவர்
தாயைத்தெருத் திண்ணைவைத்த தடியர்கள்
அன்றோ?
இமியளவும் வெட்கமின்றி இனும்கேடு
செய்வதோ?
இதையெண்ணமல் தமிழர் இன்னும்வாய்மூடி
வாழ்வதோ?
நம்மொழிக்கே ஆக்கசெய்ய நாளும் துடிப்போம்
நமது அய்யா இலக்குவனார் வழியில் நடப்
போம்
தம்மொழிக்கே தாம் துரோகம் செய்ய எண்ணும்
மூடரைத்
தமிழர்சாதி அல்லஎன்று தலைவணங்கச்
செய்குவோம்
ஈடில்லாத தமிழர் தலைவர் 'கருணாநிதிதான்'
இந்த
இணையில்லாத தமிழர் வாழ்வுக் கொள்கை
போற்றுவோம்
நாடிநாளும் உயர்த்தமிழ்க்கே நாளும்
உழைப்போம்!
நம்மின் அய்யா இலக்குவனார் கொள்கை
விழைப்போம்.

## இலக்குவனார் வாழி!

**(புலவர் கண்மதியன்)**

அன்றோர் நாளில் அந்தி நேரம்
என்றன் திருமண எழில்பெரு விருந்தும்
அழகுறு சென்னை அம்பீச் கேப்'பின்
வளமுறு மாடியில் வண்டமி ழறிஞர்
இலக்குவ னாரின் இயற்றமிழ் தலைமையில்
இலங்கிய வேளை எழுந்த தலைவர்—
பாண்டியன் செங்கோல் பளிச்சென விளங்குமி
பான்மையில் இருந்தார்! பைந்தமி ழாலே
வாழ்த்துக்கள் வழங்கி, மண்மேல் நாளும்
வாழ்நெறி வழங்கி, 'வண்டமிழ் தன்னை
உயிருக்கு மேலாய் உணர்வில் கொள்வீர்;
துயின்றால் மொழியும் துலங்கா!' தென்றே
உரைத்த போதவர் உணர்வின் எல்லை
திரைகட லன்ன தெரிய விரிந்தது!
உண்மையாய் மொழிமேல் உயிரை வைத்தவர்
என்பதை அறிய இவர்மொழி வேண்டா;
மண்மேல் ஆற்றிய மாபெரும் தொண்டே
மன்னவன் பெருமை மண்ணில் உரைக்கும்!
செந்தமிழ் மொழியை சிரத்தினில் வைத்தார்;
இந்தியை எதிர்த்தே இழந்தார் பதவியை!
பைந்தமிழ் காக்கப் பதவியை இழந்த
பண்பா டென்றும் பழந்தமிழ் நாட்டின்
சரித்திரந் தன்னில் சாகா திருக்கும்!
தரித்திரம் அவரைத் தழுவிய போதும்
'உடல்மண் ணுக்கென் உயிர்தமி ழுக்கே!
தடமிதை மாற்றேன்; தலைபிற ஏற்றேன்'
என்றவன் எங்கே? இயற்றமிழ் ஏட்டில்
தன்மனம் போக்கித் தரைபுகழ் ஆய்வைச்
செய்த அவனுளம் சிலையாய்ப் போகக்
கொய்தவன் தனைநான் கொன்றாலும் ஆறேன்!
தண்டமிழ் ஏட்டைத் தனித்தமிழ்ப் பாட்டை
என்றினிக் காண்பேன்? இலக்குவா! நின்றால்
உயிரைப் பிரிந்த உடல்போல் தமிழும்
துயிலும் நிலையைத் தூயமனங் கண்டே
துடிக்கு தய்யா! நின் தொண்டினை இம்மண்
படிக்கு தய்யா! பழந்தமிழே! வாழியவே!

* ● *

# இலக்குவனர் எழுச்சி வாழ்க!

**கவி அரசு வி. மு. உலகநாதன்**

துன்பியலோ தொடர்ந்தாலும் வாழ்வியலில்
வறுமையது தோன்றிட் டாலும்
அன்பினிலே மாருமல் ஆர்வமதில்
குன்ருமல் ஆற்ற லோடு
நன்மையிலே குறிக்கொண்டு நாட்டினிலே
நலங்காண நாடி நின்று
இன்பியலோ பூப்பதற்குப் பாடுபட்ட
இலக்குவனர் எழுச்சி வாழ்க!
மன்பதையில் வாழுகின்ற ஒழுக்கமிலாச்
சுமடிரினல் வன்மம் தோன்றிக்
குன்றனைய சிறப்பெல்லாங் குன்றினவே
குலைந்தழிந்த குறையைக் கண்டும்
தன்போக்கில் அமைதியுடன் சென்றிட்ட
வாய்வீரர் தாழ்வை யெண்ணி
வென்றிகொளும் அரிமாபோல் எழுச்சியுற்றுச்
சாடிட்டார் வீரர் வாழ்க!
சமுதாய அடித்தளத்தில் துன்ப முறும்
வறியவர்கள் தகுதி காண
அமுதமொழி தனித்தமிழோ அரியணையில்
படிப்பதனில் அமரச் செய்தால்
குமுதமலர் போல்அலர்ந்து அறிவியலோ
மிகுப்பயனைக் கொடுக்கும் இங்கே
திமுதிமென உயர்ந்திட்டக் கயவரெலாம்
சடசடெனச் சிதைவர் என்ருர்!
பிறமொழியின் ஆதிக்கம் உள்ளவரைத்
தமிழகத்தில் பெருமை யேது?
திறன்பெறவே வழியேது? தடைக்கல்லை
உடைக்காமல் சீர்த்தி யேது?
குறைகண்டும் பாராமல் தமிழாலே
வாழ்கின்ற குரக்க ராலே
நிறைவேது? எனச்சாழ எழுச்சியுற்ற
திண்மைபெற்ருர் நேர்மை வாழ்க!
தமிழுக்கோ இடயூறு தோன்றுங்கால்
துடித்துடித்துத் தாழ்வை நீக்கத்
தமியேராய் ஆற்றலொடு சாடிடுவர்
தமிழைப்போல் தனிமை பெற்ருர்!
உமிபோன்று வாழ்கின்ற தமிழ்கற்ருர்
தமிழ்க்குதவா ஊமை யாளுர்!
துமிதமென எழுச்சியுற்ற இலக்குவனர்
தமிழ்மொழிக்கே தொண்ட ராஞர்!
துணிவுடைமை பெற்றவரோ கல்வியிலே
சிறந்தவரோ தூங்கி டாமல்
பணிசெய்தார் பைந்தமிழ்க்கே! சிறப்புடைதொல்
காப்பியத்தைப் பாரோர் போற்ற
அணிசெய்தார் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்
இன்பமுற ஆக்கங் காணும்
பிணியகற்றும் மருத்துவர்போல் தமிழ்ச் சிறக்கப்
பாடுபட்டார் பெருமை வாழ்க!

# உன்நெறிக்கே உழைப்போம்

**வி. இராசபாதர்**

உயர்ந்து வாழ்ந்திட இலக்கு வேண்டும்
உயர்த்தும் இலக்குக் குறுதி வேண்டும்
உறுதி பெற்றவன் எண்ணிய செயலைச்
சிறக்க எளிதில் திறனய் முடிப்பன்
என்பதை யுணர்ந்த நும்தம் பெற்ருேர்
இன்பத் தமிழின் எழில்மிகு சொல்லையாம்
இலக்கு என்ற இயல்புடைப் பெயரினை
நிலைக்க வைத்து இலக்குவன் என்றனர்
உம்தம் இலக்கு உயர்தமிழ் ஓங்கிச்
செம்மை யுறவே செய்ய விழைந்தது
அன்னைத் தமிழின் அருமை யாகித்
துன்பம் அதற்குத் தொடர்ந்திட வொட்டா
நன்மை ஆற்றி நற்றமிழ் ஆட்சி
மின்னி மிளிர வைத்திட விழைந்தனை
முயன்று உழைத்தாய் முயற்சி வெல்லுமுன்
துயரச் செய்தித் தொட்டது செவியில்
உயிரொடு மெய்யெனும் எழுத்துக் களென்னும்
பயிர்க்குநீர் இலாமையாய் வருந்தி அழுதன
அன்னை அமுதனள் இதயம் உள்ளோர்
துன்புற் றேங்கினர் தூயநின் பிரிவால்
நின்நெறி உயர்நெறி நின்றுயாம் உழைத்து
அன்பநின் ஆன்மா அமைவுறச் செய்வமே!

● ○ ●

# இருபதாம் நூற்ருண்டு இராமன் தம்பி

**சுப்பிரமணிய சிவா**

பெருஞ்சோறு பயந்து பல்லாண்டு புரந்த
பெருங்களி றிழந்த பைதற் பாகன்
பெறும்நிலை பெற்ருர் தமிழ ரெல்லாம்
பேரணியால் நிலைபெற்ற இலக்குவன் மறைவால்
இனவெறி அகற்றிய லூதர்எழுந் ததுபோல்
இந்திவெறி ஒழித்திட இலக்குவ னெழுந்தான்
இனமெது வெனவுனைக் கேட்டால் வள்ளுவர்
இனமென விளம்பு நீயெனப் பகர்ந்தான்
பெரியாரின் வழிவந்த எழில்வேந் தவனவன்
பேரறிஞர் அண்ணுவுக் குற்றதோ ழனுவான்
தமிழ்த்தென் றல்தழுவிடவே குத்தூசி
துணையுடன் குரலுக்குப் புத்துரை தந்தான்
அன்னை மொழிப்புல மையொடு இலக்குவன்
ஆங்கிலத் திலுமடை யாய்த்தமிழ் வளர்த்தான்
குறள்நெறி நடாத்திகுன் றன்னபெருமை
பெற்ருன்
குவலயமே கும்பிடவன் புகழ்தனைப் பாடியே!

# இலக்குவனார் புகழ்வாழி

மரிய. விசுவாசம்

தேர்கொண்ட பார்வை! நிமிர்நல் நெஞ்சம்!
நேர்மை வழுவா நீதிக்கோர் தமிழன்!
சீர்கொண்ட யாப்பின் சீர்த்திமிகுப் புலவன்!
சீர்திருத்தப் பாதையினை செப்பனிட்டச்
செம்மல்!

கூர்வலிய எழுத்தாணி குளிர்தமிழ் நடையால்
குவலயம் களித்திடக் கொத்தடிமைக்
களைந்தோன்!

ஏர்பூட்டி இதயவயல் ஏற்றமுற உழுதிட்ட
இலக்குவனா! நும்புகழ் என்றும் வாழியவே!
"இலக்குடன் வாழ்மின், இல்லையில்லை
வீழ்மின்" எனும்

இதயத்து எழுச்சியை இந்நிலத்தில் விளைவித்த
இலக்குவனா! எங்குற்றனை? இமயநிகர்
நெஞ்சத்தால்

இன்தமிழ், இத்தமிழகம்; ஏற்றமுற உழைத்த
புலமையாள! பூந்தமிழா! புலம்பவிட்டு(ச்)
சென்றனையே

பொன்றமிழ்ச் செல்விதன் போக்கிடம்
இழந்தனளே!

உலகத்தீர் ஒன்றுபட உளக்கதவு திறந்த
உயர்தமிழ் மறவநீ! உலகுனை மறந்திடுமோ?
"தமிழேதன் மூச்சென தமிழேப் பேச்சென"
தற்காத்து வாழ்ந்த தன்னேரிலா(த்)
தமிழேறே!

அமிழ்தொக்கும் விருந்தளித்த அருந்தமிழ்
அன்பகமே!

அருங்கலை வித்தகமே! ஆற்றலின் முத்தாரமே!
குமிழ்சிரிப்பு முறுவலின் கொஞ்சுதமிழ்த்
தத்துவமே!

குறள்நெறி வாழ்ந்த அறநெறித் தூயோய்!
இமிழ்கடல் கடந்தும் எந்தமிழ் புகழ்சேர்த்த
இலக்குவனா! நும்புகழ் இலக்கியம்
வாழியவே!

இந்தியெனும் இழிவரக்கி இந்நாட்டில் நுழைய
"எழுமின்! எழுதுமின்! எதிர்கொள்ப்
பகை" என

புந்திதனை புடம்போட்டு புத்துணர்ச்சி ஊட்டிய
பொருக்களத்து பரணிப்பாடி படைவென்றப்
பாவல!

செந்நீநா வன்மையால் செந்தமிழ்த் தாயவள்
சென்னியில் புகழாரம் சூட்டிய நாவல!
தந்தியறுந்த வீணைபோல் தவிக்கவிட்ட தமிழ்க்
குரலே!

தமிழ்த்தாய், அண்ணாவழி தன்மகனை
அழைத்தாளோ?

○ ● ○

# பைந்தமிழ் வித்தகன்



தாரை செவதாமணாளன்

வஞ்சக நெஞ்சினர் கொஞ்சு தமிழினைப்
பஞ்சனை யாக்கித் தஞ்சம் புகுந்தே
மிஞ்சும் புகழினை அடைவர்; இவனோ
கெஞ்சுதல் அறியா(ன்); அஞ்சா நெஞ்சினன்
சிந்தும் மழலைச் சொல்லினைக் கனிவாய்ப்
பந்தனை யுடனே பேசியே மகிழ்ந்தோன்
செந்தமிழ் காத்த சிந்தனைச் செம்மல்
சொந்த மொழியினை உயர்த்த உழைத்தோன்
அண்ணா போற்றிய அருந்தமிழ்ச் செல்வன்
புண்படாப் பேசும் பண்புடை வேந்தன்
மண்ணில் தமிழ்மொழி முதன்மை பெற்றிட
எண்ணமும் செயலும் நன்றாய்க் கொண்டோன்
துணிவுடன் இந்தி மொழியினை எதிர்த்தே
பணியினை இழந்தவன்; பைந்தமிழ் வித்தகன்
அணியென விளங்கி இலக்கியம் படைத்தவன்
மணியெனத் திகழ்ந்தவன் மாண்புறு
இலக்குவன்

# தமிழும் வணங்கும்!

கவிஞர் கமலநாதன்

தமிழ்பேசி வாழ்ந்தவர்கள் உண்டு! இன்பத்
தமிழ்விற்று வாழ்ந்தவர்கள் உண்டு! சிந்துத்
தமிழுக்கு வாழ்ந்தவர்கள் பலபே ரென்றால்;
தமிழாகி வாழ்ந்தவர்கள் சிலரே உண்டு!
அமிழ்தொத்த தமிழாகி வாழ்ந்த வர்கள்;
அவனிதனில் என்றென்றும் நிலைப்ப துண்டு!
சிமிழ்தமிழுக் காருயிரை அளித்த உன்னை;
சிரந்தாழ்த்தி வணங்கிடுமே தமிழாம் அன்னை!
நக்கீரன் பரம்பரையின் முதல்வ! துன்பம்
நந்தியுனை வரும்போதும் சிரித்தாய்! உன்னைச்
சிக்கலிலே சிலர்மாட்ட முயன்றார்; அன்னார்
சிரந்தாழ்த்தி உனைவணங்கச் செய்தாய் நாளும்
"விக்கல்மன" நோயாளி வாழும் நாட்டில்;
விரிகதிர்போல் உன்கடமை ஆற்றி வந்தாய்!
திக்கெட்டும் நின்பெருமை புகழும் ஓங்க;
தமிழ்இலக்கு வனாகநானும் சபத மேற்றேன்!!

## தமிழ் மகனே தூங்கு..!

—இளசை அருணா—

வெண்தாடி வேந்தனுக்குப் பின்னாலே தோன்றி
வேரோடும் சமுதாயப் புற்றின்நோய் தீர்க்க
முன்னாலே சென்றிட்ட மூத்தவனும் நாட்டு
முத்தமிழின் வித்தகனே இலக்குவனார்
நெஞ்சே!
எந்நாளில் காண்போமோ? யார்மொழியைக்
கேட்போம்....?
இத்தரணிப் பசித்தீர்க்க இரையாகி னாயோ....?
இந்நாளில் எமையெல்லாம் இருவிழிநீர் சிந்த
இடம்காட்டிச் சென்றாயோ...? இன்தமிழே
கூறு...!
அண்ணாவின் பின்னாலே அணியணியாய் வந்த
அமைப்புக்குப் புகழேந்தத் தலைமையினைத்
தாங்கி
கன்னியா குமரிமுனைக் கரையோரம் கல்வி
தலைமையினை நீயேற்று தமிழ்க்குரலே பாய்ந்த
வெள்ளமெலாம் இன்றெந்த ஆழியினுட்
தேக்கம்....?
அதுவேதான் இதுவேதான் இன்றெங்கள்
ஏக்கம்!
மண்கூறும் கதைகளெலாம் உன்திறமை பாடும்
மாசில்லாத் தலைமகனே தமிழ்மடியில் தூங்கு!

○ ● ○

## இலக்குவனார் உலவுகின்றார்

வே. மேகதாசன் பி. ஏ.

பாட்டாளித் தோழனைத்தான் பாட்டின் வேந்தர்
பைந்தமிழில் பாடிச்சென்றார்! ஆனால்
அன்னோன்
கூட்டாளி யாரென்றால் வறுமை என்பேன்!
குவலயத்தில் பொதுத்தொண்டன் கண்ட
உண்மை
தேன்சொட்டும் தமிழுக்கே குருதி கொட்டிச்
செத்ததற்காய்ச் சிலைவைத்தல் நன்றே!
ஆனால்
நானிலத்தில் அவர்குடும்பம் இனிமேலேனும்
நலிந்திடாமல் காப்பதேநம் கடமை என்பேன்!
கொஞ்சுதமிழ் குலவுகின்ற தமிழர் நாட்டில்
கோலோச்ச இந்திப்பேய் வரவேண்டாதே
அஞ்சுதலை அறியாத மறவன் அன்று
ஆர்த்தெழுந்துப் போரிட்டுச் சிறையில்
வெந்தே
இலக்குதனை வாழ்வதனில் கொண்ட வேந்தன்
இலக்குவனார் இலக்கியத்தில் வாழ்வாரென்றும்
உலகத்தில் அவரில்லை! ஆனால் அன்னார்
உலவுகின்றார் என்போன்ற தமிழர் நெஞ்சில்!

## சீறிப் பாய்ந்த கதிரவனே!



—புலவர் இலக்குமிபாலன்—

எந்தை முன்னோர் போற்றுகிற—உயர்
ஏற்ற மிக்க தாய்த்தமிழே!
சிந்தை போற்றும் மொழிகாக்க—உடன்
சீறிப் பாய்ந்த கதிரவனே!
கன்னல் போன்ற தமிழமுதை—கற்
கண்டாய்ச் சுவைத்த தலைமகனே!
இன்னல் வந்த போதிலும்—இங்
கெதற்கும் அஞ்சாத் தமிழ்க்குயிலே!
இலக்கி யங்கள் படைக்கவந்த—ஓர்
ஈடில் லாத குளிர்நிலவே!
இலக்கும் கொண்ட இலக்குவரே நீர்
இன்ப மூட்டும் சரித்திரமே!
திங்கள் போன்ற தமிழகத்தை—அன்பாய்த்
தேடி வந்த மணிவிளக்கே!
பொங்கிப் பாயும் தமிழ்க்கவியாம்—ஓடும்
பொன்னி நதியால் வணங்குகிறேன்

○ ● ○

## சிரம்கொடுத்துமே பாடுவோம்!

சிறுவள்ளூர் ந. சுப்பிரமணியன் B Sc., B.T.

தமிழ்வாழ்ந்திடத் தமிழ்நாட்டிலே
தலைதாங்கிய இலக்குவன்,
இமியளவிலும் இந்திநுழையவே
இடமளித்திடாச் சிங்கமே!
இராமனுடனே இலக்குவன் நிலை
இராமகாவியம் சாற்றிடும்;
இராவணன்புகழ் இருந்தாடிட
இலக்குவன்வழி யாற்றினான்!
சிறப்புடன்பணி ஆற்றியதமிழ்
இலக்குவன்புகழ் நிலைக்கவே,
சிறாருட்பட சிறந்தகலைஞரும்
சிரம்கொடுத்துமே பாடுவோம்!

# வாழ்கநின் நாமம் ஐயா



கலுவையன்

பேராசிரியனை! பகுத்தறிவுப் பெட்டகத்தை!
செஞ்சுடர்
சீராரும் செல்வனை! இலக்குவனை! —நீடுலகில்
தங்கக்குணம் கொண்ட சால்பன்! தடந்
தோளான்
எங்குபோய்க் காண்போம் இனி

கோலத்திருமுகமும் கொள்கைச் சுடரேந்தும்
சீலத்திருச் சொல்லும் செவ்வியதாய்—
மாற்றலரைக்
காற்றில் துரும்பென்ன கன்னித் தமிழாலே
தூற்றுவாய் தோன்றலே நீ

என்ன குறையிட்டோம் யாமிங் கிருக்கையிலே
முன்னம் விரைந்தாயே ஆங்குனக்குச்
—செந்தமிழில்
எண்ண இயலா இலக்கியப் பணியாற்ற
அண்ணா அழைத்தாரோ· தான்.

தமிழுக்கே இழிவென்றால் தனக்கென்பாய்,
பண்பில்
அமிழ்தோ டணையாய், ஐயா!—கரிகால் நற்
கிள்ளியோ டொத்த கிழவா நின் வாய்ச்சொல்
பள்ளி பயிலுவதெந் நாள்

வாய்த்த இடமெலாம் வாழ்வித்தாய் செந்தமிழ்த்
தாய்த்திரு நாடே தன்னுயிராய்—வாழ்நாளில்
வாழ்ந்தாய் நீ வாழ்த்தி வளரிமை யம்போல
வாழ்கநின் நாமம்ஐயா

○ ✻ ○

# நாளும் வாழ்வார்!

கவிப்பித்தன்

அன்பொன்றே பேசுவதில் தன்மைச் சோமன்;
அறிவொளியை வீசுவதில் கதிராம் செல்வன்;
தன்பணியை ஆற்றுவதில் ஓயா ஆழி:
தீமைமழைப் பொய்ம்மைகளை யழிக்கும் ஊழ் ஊழ்;

இன்பத்தைக் கூட்டும்பைந் தமிழைக் கற்றே
எண்ணற்ற நூல்வரைந்த தலைமைக் கோமான்;
துன்பந்தான் வறுமையினால் வந்த போழ்தும்
துவளாத தமிழகத்துத் தலைமைச் சான்றோன்!

ஓராண்டே உலகத்தில் வாழும் வாழை;
ஒருநாளே வாழ்ந்திடுவான் அறிவில் கோழை;
யாராண்டால் நமக்கென்ன என்று பேசிக்
காலத்தை யோட்டுவார்க்குக் கணமே யாகும்;

பாராளும் பேறுபெற்ற மன்னர்க் கெல்லாம்
பண்போடே ஆட்சிசெய்த வரையில் தாமே?
சீரியநற் றமிழ்மொழிக்கே உயிரை யீந்த
செந்தமிழன் இலக்குவனார் நாளும் வாழ்வார்!!

✻ ○ ✻

# இலக்குவனார்!

த. இராமலிங்கன்

இன்தமிழ்தாய் ஈன்ற இலக்குவனார் மாப்புலவ!
நின்புகழைப் பாடிடவே நீளுவகை கொண்டோம்
தமிழ்நாட்டில் வாலாட்டித் தாவிவந்த இந்தி
நிமிர்ந்திருக்க முடியாமல் நீளிடுப்பை மாய்த்து
தவிடுபொடி யாக்கினையே! தமிழ்வாழ நீயும்
கவிதொடுத்துப் பாடினையே! கம்பியுடை
மாச்சிறையில்
கண்விழித்து வாடினையே! கன்னிமொழி
மாத்தமிழும்
கண்மணியாய் இங்கிருக்க கண்டமொழி எம்
மண்ணில்
காலெடுத்தும் வைப்பதுவோ? கையுறை
பதவியுமே
கால்தூசே யென்று கனன்றே எழுந்தனையே!
மன்பதையில் நீர்தானும் மாத்தமிழ்க்குச் செய்த
பெரும்
உண்மைத் திருத்தொண்டை உள்ளந் தனை
விடுத்தே
எம்மில் மறப்பவர் இங்கில்லை ஒண்புகழே!
விம்மி அழுகின்றோம்! வேதனையால் வாடு
கின்றோம்!
எம்மான்நீ இங்கன்றி எங்குதான் சென்றனையோ!
விம்மலையே மாய்க்க விளம்பு

# தலைமுறையாய் வாழ்பவர்!



முத்தரசன்

பெரியாரின் தலைமையிலே தொண்டனாகிப்
பேரறிஞன் முன்னணியில் நின்ற மேலோன்
கரும்பாலை தரும்பாலைக் கடைந் தெடுக்கும்
கற்கண்ட தைப்போன்ற கனிந்த சொல்லோன்
பெருமானாய்ப் பதவிபொரு ளெதையும் நாடான்
பேழையவ னிலக்கியத்திற் பெருந்த
கையோன்
பெரும் போராட் டங்களிலும் இந்தி யென்னும்
பேயோட்ட மந்திரிக்கோ லெடுத்த தேவன்!

தலைமுறைகள் பலமுறைகள் மாறும் நாட்டில்
தழைதழையாய்க் கிளைவளருந் தமிழை ஏட்டில்
தலையெடுக்கக் களையெடுத்துத் தரணி மேட்டில்
தலையாயு மிலக்கணத்தை மாற்றித் தந்தோன்
தலையெடுக்குந் தலைவனுக்கும் பயிற்சிக் கூடம்
தலைவலிக்குந் தமிழனுக்கும் டாக்டர்
அன்னோன்
தலைமுறைஇத் தலைமுறையிற் தமிழர் நெஞ்சில்
தவழுமிலக் குவன் புகழோ வாழ்க வாழி

● * ●

# எங்கள் இலக்குவனர்!

த. கோவேந்தன்

வலக்கரத்தால் வண்டமிழை வந்தேறி மக்கள்
இலக்கணத்தில் நல்ல இலக்கியத்தில் தீமை
கலக்கிய காலத்தில் காட்டாறாய் எங்கள்
இலக்குவனே காத்தான் எதிர்த்து!
எங்கள் இலக்குவன் இன்றில்லை என்றாலும்
சிங்கப் படைநாங்கள் செந்நீரில் மூழ்கிவந்தோம்
தங்கத் தமிழழிப்பார் தம்மை அழிப்பதுவே
இங்கெம் இலக்குவனுக் கேற்பு

# இலக்கியத் தும்பி

கவிஞர் ப. தண்டபாணி

தும்பி யொன்று துணையாய்க் கண்டது
நம்பி யென்னிடம் நகர்ந்து வந்தது
புவியில் தனக்கும் புகலிடந் தேடிக்
கவிதைப் புத்தகக் கட்டி லமர்ந்தது
செவிக்கி னியநற் செய்யுளைக் காண
கவிஞ னென்றே கருதி வந்ததோ!
பறக்கு மழகுப் பாங்கைக் கண்டேன்
இறக்கை தந்த இன்னிசை கேட்டேன்
புத்தகம் பற்றிப் பொறுத்தி ருந்தது
சத்த மின்றிச் சால வமர்ந்தது
காலை யலுவலகங் காணச் சென்றேன்
மாலை வருகையில் மயங்கி யிருந்தது
என்ன காரணத்தால் எழுந்தி ருக்காது
இன்னு மதிலே இருந்தி ருக்கும்?
இரவெலா மப்படி யிருந்த தும்பியை
கருணையுடன் மறுநாட் காலையிற் கண்டேன்
பிடியை விடாது பின்னு மிருந்தது
கடிதி லதன்நிலை காண விழைந்தேன்
கையை யசைத்தேன் கழல வில்லை
கையாற் றொட்டேன் கம்மென் றிருந்தது
பறக்குந் தோற்றப் பாங்கி லிருந்தும்
மறந்து விட்டு மயங்கி யதேனோ?
எடுத்துப் பார்த்தேன் என்னருந் தும்பி
விடுத்த உயிரால் வீணயற் றிருந்தது?
என்னருங் கவிதையில் இருந்த தாலே
தன்னை யும்மறந் ததாகி விட்டதே!

* ○ *

# நெய்தல்...பாடாகி......

தே. நே. சித்திரன்

அமிழா நெடுந்தமிழ் இலக்கியன் இலக்கணன்
அசைவிலா நெஞ்சுர அரிமா! புலிமா!
உலகமுதற்குடி ஒண்டமிழ்ச் செறிகுடி தேட்டன்
நலங்கமழ் சிந்தை நல்லியப் பாடன்
பொலங்காழ் புலக்கண அறிவுப் பேராளன்
நெடுங்கனிய முனைவன் முத்தமிழ்ப் படைப்பன்
''வெண்ணெய் விளைவாழ முடைத்தாழி
உடைவாக''
தமிழ எண்ணம் விளைவாழ முகிழ்வான
அரும்போழ்தில் வல்லான் ''இலக்குவன்''
இல்லா
நெடுந்துயர் ''நேரா நேர்ச்சி'' அச்சோ!
நெஞ்சின் அழுங்கற் சுவடாகி ஆற்று
''நெய்தல்'' பாடாகி நீடியதே நெட்டுறவே!

# இலக்குவனார் குறள் பத்து



பாவலர் செங்கை அழகன்

சீரும் சிறப்புற்றார் செம்மல் இலக்குவனார்
கூறும் தமிழ்மொழியைக் கொஞ்சு!

கொஞ்சும் தமிழ்மொழியைக் கொஞ்சுநல் [பாவலனை
நெஞ்சில் நிறுத்து நிதம்!

நித்தம் அவன்பாட்டை நெஞ்சில் நிறுத்திட்டால்
முத்துத் தமிழ்மணக்கும் முன்!

முன்னேநல் பாட்டுரைத்த மூதறிஞன் [தன்புகழைப்
பொன்னேபோல் காத்தல் புகழ்!

புகழ்மிகு நந்தமிழைப் போற்றி மகிழ்ந்தே
திகழ்ந்த இலக்குவன் தேன்!

தேன்சுவையோ நாதெவிட்டும் தெய்வத்திருப் பாச்சுவையை
பொன்தேவன் போற்ற வணங்கு!

வணங்கி வழிபட்டால் வாழ்விற் சிறந்த
குணங்களைக் கண்டிடலாம் கூர்ந்து!

கூர்ந்தேதான் நோக்கிடில் கோடிநலம் தான் [பெறலாம்
தேர்இலக்குவன் தன் செயல்!

செயல்தனி லெங்குமே சீர்திருத்தங் கண்ட
மயங்கா இலக்குவனை வாழ்த்து!

வாழ்த்தி வணங்கிடுவோம் வண்டமிழ்ப் பாவலர் [தம்
தாழ்வை யுலகில் தவிர்த்து!

○ * ○

# துதிக்கின்றோம்

கண்ணுறங்கு

இந்தியாம் மந்திமொழி இங்குவந்து
செந்தமிழை பந்தாடத் துடித்தபோது
இந்தியே இங்குவரத் தகுதியில்லை
உன்தொந்தியை மண்புதைப்போம்
ஓடென்று

முந்தியே வந்தபெரும் கூட்டத்திலே
செந்தணலாய் வந்திட்ட செந்தமிழே!
வஞ்சிறைக்கும் அஞ்சாத சிங்கமாகி
நெஞ்செலாம் நிறைந்திட்ட இலக்குவனாரே!
பஞ்சாய்ப் பறந்ததுவோ? பூதஉடல்
அஞ்சி அடங்கியதோ? அறிவுள்ளம்!
கொஞ்சநாள் தங்கியது போதுமென்று
நெஞ்சுக்குள் நிறுத்தினாயோ? மூச்சதனை!
செந்தமிழாள் கண்ணீரால் மடிவிரிக்க!
செவ்விதழால் சேயே என்றழைக்க!
துஞ்சாமல் துஞ்சுகிறோம் துயர்மறந்து!
துதிக்கின்றோம் மதிக்கின்றோம்!
கண்ணுறங்கு

* ○ *

# தமிழ் வறிஞர் இலக்குவனார்

சி. சு. முத்துசாமி

தமிழ்ப் பற்றின் தனிச்சிகரம்— தமிழ்
முன்னணிப் போர்வீரன்!
தமிழ் அறிஞர் இலக்குவனார் — அந்தோ!
தமிழ்வறிஞர் இலக்குவனார்!

பன்முறைகள் பதவிகளை—நீ
துறந்தாய்! சுயநலத்தை
மறந்தாய்' பிற அறிஞர்
ஏட்டினிலே வாய்ச்சண்டை
காட்டிடுங்கால் களத்தினிலே
குதித்தவன் நீ! நினைத்தால்—நெஞ்சம்
கொதிக்குதடா! ஏனிந்தப்
பைந்தமிழில் இத்துணையும்
பந்தபாசம் வைத்தாய்?

செந்தமிழைக் காக்கச்
சிறைசென்ற செம்மலே!
உந்தன்குடி காக்க,
அண்ணன்போல் மறந்தவனே!
ஒல்காப்புகழ் தொல்காப்பியம்
உள்ளளவும் உன்புகழ் வாழும்!

# விதியினை அழிப்பேன்!



—வலசை ப. கணேசன் :—

மொழிமீது பற்றே இல்லா
மூர்க்கரின் ஆட்சி தன்னில்
பழியேற்று சிறையுஞ் சென்றாய்
பணியினை இழந்து நின்றாய்!
விழியாகத் தமிழைப் பேணி
வீணரைச் சாடி! நல்ல
அழியாத புகழைப் பெற்றாய்!
அனைத்ததோ விதியாம் உன்னை!
நலக்குறை வுற்ற போதும்
நற்றமிழ்க் காப்ப வர்க்கு
வலக்கர மாக நின்றே
வான்மொழி காத்த மேலோய்!
இலக்குவ னாரே! எங்கள்
இதயமே! எம்மை விட்டு
விலக்கியே அழைத்துச் சென்ற
விதியினை அழிப்பேன் நானே!

○ * ○

# இலக்குவனார் புகழ்வாழி!

மா. மகாலிங்கம்

உண்மையி லுயர்ந்து நின்று
உழைப்பினில் சிறந்து நின்று
திண்மையால் வெற்றி பெற்றுத்
திருத்தமிழ்த் தலைவ னாகி
பண்ணிசை தோற்க அன்புப்
பாசத்தை விண்டே இன்று
அண்ணாவைக் காணச் சென்ற
அய்யாவைக் காண்ப தென்று?
மடமையைக் கொழுத்தி மாற்றார்
மமதையை அழுத்தி நெஞ்சத் (து)
உடமையாம் ஆண வத்தார்
உருந்தெரியாமல் செய்த
கடமையின் ஊற்றே எங்கள்
கனித்தமிழ்க் காவ லோனே!
நடமிடும் இலக்கு வாஉம்
நனிபுகழ் வாழி! வாழி!

# விழியின் மணி!

புலவர் வெற்றியழகன்

விழியில் வேலை வீழ்த்து தற்போல
மொழியிற் கலப்பை மூடர் செய்தார்!
இழிசெயல் வேறெதும் இருக்கா திதுபோல்!
குழியினில் தமிழைக் குவித்தே அடைத்த
இழிஞர் செயலை எரிக்கத் துணிந்தார்
மொழித்தூய் வாக்கிய மறைமலை யடிகள்!
விழித்தெழத் தமிழரை வீதியிற் கூவினார்!
ஒழியா தறிஞர் ஒண்டமிழ் காக்கத்
தழுவியே அறிஞர் தகுபலர் வந்தார்!
விழியாந் தமிழில் விளங்கிடும் வேலாம்
அழிக்கும் பிறமொழி அகற்றிடத் துணிந்தா
பழியையும் ஏற்றார் பாழிந்தி யெதிர்த்துக்
கழித்தார் பலநாள் கம்பிச் சிறைக்குள்!
விழிவேல் எடுத்த வீரர் நமது
எழிற்றமிழ் அறிஞர் இலக்குவ னாரோ
விழியின் மணியாய் விளங்குவார்
கொழிதமிழ் உள்ள காலமெல் லாமே!

* ● *

# தமிழாய் வாழ்ந்த இலக்குவனார்

கா. உ. கிருட்டின மூர்த்தி

நற்றமி ழன்னை நனிசி றப்பாகப்
பெற்ற மக்களுள் பெரும்புகழ் வாழ்ந்தவர்!
எங்கே தமிழுக் கெதிர்ப்பென் றாலும்
பொங்கி யெழுந்து புன்மையை மாய்க்க
முனையும் இயல்புடை முத்தமிழ்க் காவலர்
அனைத்துத் துறையிலும் அன்னைத் தமிழே
இருந்தே ஆட்சி இயற்றிட வேண்டும்
மறைந்திட வேண்டும் மாற்று மொழியாம்
ஆங்கிலம் அதனின் ஆதிக்கம் என்ற
தீங்கிலாக் கொள்கையே சிந்தையில்
கொண்டவர்
குறள்நெறி யென்னும் கனித்தமிழ் ஏட்டைச்
சிறப்புற நடத்திச் சீர்த்தியைப் பெற்றவர்
இலக்கண இலக்கிய புலமை நிறைந்த நம்
இலக்குவ னாரெனும் இன்றமிழ்ப் புலவர்
மண்ணக வாழ்வை முடித்து நாம் வருத்த
விண்ணக வாழ்வை யடைந்தார் அன்னார்
ஆன்மா அமைதி அடைந்திட இறைவனை
வேண்டித் தொழுதவ வித்தகர் வழியில்
செந்தமிழ்ப் பணியைச் சேர்ந்து நாம் அனைவரும்
எந்த நாளும் இணைந்தாற் றுவமே!

# இலக்குவனார்—கல்நெஞ்சக்காரன்!

### கவிஞர் புலமைதாசன்

எனை நீங்கள் அறிஞரென்று ஒப்ப மாட்டீர்!
எதிர்இருக்கும் உனை நானும் ஒப்ப மாட்டேன்!
இணையாக நாமிருவர் ஒப்புக் கொள்ளும்;
இதயமுள்ள ஒருமனிதர் உண்டு! யாரா?
சுனை நீர்போல் பேச்சாளன்! அறிவின் வேந்தன்!
சுறுசுறுப்பில் எறும்புக்கும் ஆசான்! தீங்கு
நினைக்காத கல்நெஞ்சக் காரன்! நெஞ்சை,
நாராக்கி எண்ணமலர் தொடுக்கும் அன்பன்!
நல்லவன்தான்! நாணயமும் உள்ள வன்தான்!
நீதிக்குப் போராடும் வல்ல வன்தான்!
அல்லதனைத் திட்டிவந்த தீக்கு ணத்தால்;
அன்றுடம் துன்பத்தேன் குடித்த வன்தான்!
கல்லொன்றைக் கையெடுத்துக் 'கனியே'
என்றால்;
காசுவரும் என்றறிந்தும் 'கல்லே' என்றான்.
சொல்லுங்கள் இப்போது பார்ப்போம்? நான் நான்
சொல்கின்ற குணநலன்கள் யார்க்கு உண்டு?
புரிகிறதா? புரியாது! தத்து வங்கள்
புரிந்துவிட்டால்' 'வாழ்க்கைப்போர்'
முடிந்துப் போகும்!
நரிபோன்று உருவத்தில் நாயி ருந்தும்;
நாய்போன்று, நரிக்கூட வால்ஆட் டும்?
வாய்
விரிப்பதெல்லாம் சிரிப்பென்றால்; சிரிப்பே
வேண்டாம்!
வஞ்சனையின் சூழ்ச்சிவலை, சிரிப்பே யாகும்!
உரிமையுடன் தெரிவிப்பேன்! நமக்கு அன்பு,
உறங்காத நன்றியென்றும், வேண்டும்!
வேண்டும்!!
கவிஞனாக வாழ்பவர்கள் உண்டு! மக்கள்
கருத்தினிலே அவர்வாழ்வ தில்லை! நல்ல
புவியாளும் மன்னர்களும் உண்டு; மக்கள்
பூமனத்தை அவர் ஆள்வ தில்லை! ஆனால்
கவிஞனாக, கலைஞனாக மட்டு மன்றி
காலம்புகழ் மனிதனாக வாழ்ந்தா ரென்றால்
புவியறிந்த ஒருவருண்டு! அவர்தான் வாழும்
புகழோங்கு "இலக்குவனார்"! காற்றாய்
வாழ்க!!

# நிலைத்து வாழி!

### கோ. மா. இராசகோபாலன்

பழகுவதில் தென்றல்! பழச்சுவையே நட்பு!
பரந்ததமிழ் உள்ளம் விரிந்தபெருங் கடலே!
ஒழுக்கஒளி விளக்கு! உயர்நேர்மை மூச்சு!
ஒண்மை கூர்நோக்கோ பகுத்தறிவு ஊக்கம்!
விழுப்புமொழித் தொண்டில் மேருவெனுங் கோடு
எதிர்த்துவந்த இந்தி இடிபுண்டே ஓடும்!
அழகுதமிழ் அன்னை அருமந்தப் பிள்ளை
அமுதமொழி கேட்க அழைத்துக்
கொண்டாளோ
எளியஆ சிரியராயிருந்து உழைத்தே
ஏற்றமிகு உயர்பதவி பெற்றமேதை!
களிப்புறவே பிறர்க்குத்தரும் கனிவு கொண்
டோன்,
கடுகளவு விளம்பரமும் வேண்டா மேலோன்!
வளப்பமிகு தமிழ்மொழிமேல் மாளாக் காதல்
வைத்ததனால் தமிழ்ப்பணியே வாழ்வாய்க் கண்டு
களைப்பின்றி காலமெலாம் உழைத்த செம்மல்!
கன்னித்தமிழ் போலவன்சீர் நிலைத்து வாழி!

* * *

# "எங்கள் டாக்டர்"

### ப. மூர்த்தி

தமிழுக்குத் தன்னுயிரை ஈந்தே இந்த
தரணியிற் பெரும்புகழைப் பெற்றுக்கொண்டார்!
அமிர்தம்போல் இனித்திடுமே அவரின் பேச்சு;
அறிவான நடையாலே அவனி முற்றும்,
தவறுது-மொழிவளர்த்தார்! தமிழைக் காத்தார்!
தரமான முறையினிலே தமிழர் வாழ்வைக்,
குவலயத்தில் கொண்டுய்யும் கொள்கை
கண்டார்!
குணமான குணக்குன்றும் எங்கள் டாக்டர்!
இலக்குவனார் என்றிட்டால் தமிழர் நாட்டில்
இனியபெருந் தமிழ்மகன்போல் காண்பதில்லை!
பலகற்ற மேதைஇவர்! தமிழின் வாழ்வைப்
பாரினிலே உயர்ந்திடவே வழியுங் கண்டார்!
தமிழ்மொழியின் உயர்வுக்கே பகலும் அல்லும்
தளராதுப் பணிபுரிந்தார் இலக்கு வனார்!
அமிழ்தான இவர்வழியில் நாமே என்றும்,
அணிவகுத்து நின்றிடுவோம் வாரீர்! வாரீர்!

# "பாதை செல்வோம்"

### கவிதை : புலவர் "கோமுகி".

செந்தமிழர் சிந்தையெலாம் பெருமை கொள்ளும்
சீர்சான்ற இலக்குவனார் சேவை எண்ண,
நந்தமிழர் மேன்மைக்குச் சேவை செய்ய
நாளெல்லாம் போதாமல் நொந்த அன்பர்,
'இந்தி'யெனும் பகைவெல்ல ஏற்ற தொண்டில்
இருள்தங்கும் சிறைசென்று பெற்றார் துன்பம்;
பைந்தமிழின் ஐந்திலக்கண அறிவைப் பெற்றுப்
பார்போற்றும் நூல்செய்து சிறந்து வாழ்ந்தார்!
சிங்கமென இளைஞரெலாம் எழுச்சிக் கொள்ள
சிந்தையெலாம் செந்தமிழின் வீரம் பாய்ச்சி,
எங்குமிக உணர்வு வெள்ளம் பெருக வைத்தார்
எழுச்சிக்குரல் பாய்ச்சிட்ட எங்கள் சிங்கம்
தங்கமெனும் குணங்கொண்ட செம்மல், வீரத்
தமிழரென இங்குள்ளார் உணரச் செய்தார்!
பங்கமிலாப் பைந்தமிழர் மேன்மை காக்கப்
பண்பாளர் இலக்குவனார் பாதை செல்வோம்!

# இலக்குவனார் இல்லை!

கவிஞர் ப. தண்டபாணி

(அறுசீர் விருத்தம்)

வாய்மைமேடு பெற்றெடுத்து வழங்கிற்று
வண்டமிழின் வளர்ப்பு மகனாய்
வாய்மையோடு வாழ்ந்துவந்த வீரனையே
யெந்நாளும் வையம் போற்றும்
தூய்மையோடு தமிழ்த்தொண்டில் தூங்காம
நுழைப்பவனைத் துன்பந் தொடரும்
சேய்மையான முன்னேற்றம் நெருங்கிவரப்
பிற்போக்குச் சென்று விடாதா?

சிங்காரத் தந்தைக்குச் சிறந்தமகன் இலக்குவனார்
சிறப்பாய்ப் படித்தார்
மங்காத தமிழ்ப்பணியில் பண்டார கர்ப்பட்டம்
மண்ணிற் பெற்றார்
தங்காத செல்வத்தால் தரணியிலே துன்பத்தைத்
தானு மடைந்தார்
பொங்காத தமிழருள்ளம் பொறு மையுட
னிருந்ததுவும் ரட்டுத் தானே?
வடநாட்டு இந்திமொழி வந்தவழி தடுத்தடைக்க
வரிந்து சென்றார்
திடமான நெஞ்சத்தால் வெஞ்சிறைக்கே
யஞ்சாது தீரர் போனார்
மடமான தமிழ்நாட்டார் அவர்வறுமை நோய்
விரட்ட மறந்து விட்டார்
குடமாகக் கண்ணீரைக் கொட்டுவதால் அவர்
குடும்பங் கொள்வ தென்னே?

வணவானாய் வாழ்ந்தசீலர் குறள்நெறியைப்
பரப்பிவிட்டார் கொள்கை சிறக்கப்
பிணமான போதுமண்ணில் அவர்மக்கள்
பெற்றதுன்பம் பெரிதாம் அறிவீர்
மணமாகாப் பெண்களுமே ஐவருள்ளார்
நினைக்கையிலே மயக்கம் வருமே!
பணமாகக் கொடுத்துதவி நம்கடமை
செய்திட்டால் பாங்காய் வாழ்வர்

# "தவிக்க விட்டார்"



கங்கை முத்துக்குமரன்

தமிழை அழித்தாலே தான் வாழ
வழியுண்டென்று
தமிழை ஒழிப்பதாக நல்லமொழி வரக்கண்டன்று
தமிழை வளர்த்தாலே தமிழ்நாடு தழைக்கும்
தமிழை நினைத்தாலே தாழாமை நிலைக்கும்

தமிழே நமதுயிர் தமிழ்போயின் ஏதுயிர்?
தமிழே அமிழ்ததை அறியாதவர் அல்ல உயிர்
தமிழே! அன்னைபோல் வேற்றுமொழி இணை
யுண்டோ!
தமிழே! அன்னையே! அடங்குவதுனக் கரு
கதையோ!

புவியும் பொறுத்திடுமோ! புறப்படு! மொழிகாக்க
தவியாத நெஞ்சம் தவிக்க வந்தமொழியை
தவிக்க விடுகவென்று! கவிதைக் கீழாளும்
கவிராச இலக்குவனார் தோள்தட்டி நின்றபோது

புவியாள் வார்தவிக்க விட்டார் அப்பழியை
புவியார் புத்தியிலும் புகட்டுவோ மென்று
புவிவிட்டுப் புறப்பட்டு அண்ணாவின் பேர்கேட்டு
தவிக்குத் துயர்பெறுக்க நாம்தவிக்க விட்டார்!

# ஏன் நகைக்கவில்லை

வாசுதேவன்

விழியென்று சொல்லியும் விழிக்கவில்லை
உழையென்று ஓதியும் உழைக்கவில்லை.
விதியென்று பாடியே வித்தை காட்டும்—அந்த
வீணரைக் கண்டுமேன் நகைக்கவில்லை?
உழுதுண்டு வாழ்பவன் அழுதிருக்க
கழுகென்று சிலரதைத் தாம்பறிக்க
இது தங்கள் உரிமையென் றுரைப்பவரை நீ
இன்னமும் கண்டு ஏன் நகைக்கவில்லை?

சமயங்கள் சாதிகளை வளர்த்து
அமைகின்ற அமைதியெலாம் கெடுத்து
நிலவும் இந்நாட்டவர் நீதிதனை — அப்பா!
நித்தமும் கண்டுமேன் நகைக்கவில்லை?
எல்லாரும் பசியாற வழியுமில்லை
எல்லாம் ஓர் இனமாக நெறியுமில்லை
இழிவு கண்டே நகைத்தார் இலக்குவனார்!
என்றாலும் விடுதலை நாடென்கிறார் — இந்த
ஏமாற்றம் கண்டுமேன் நகைக்கவில்லை?

# தமிழ் முனிவா வாழ்க!

மணவை இளங்கோவன்

இலக்கியத்தில் புதுமைதனை செய்வோ ரெல்லாம்!
இன்னல்பல பட்டுமனம் உடைகின் றூர்கள்!
இலக்கியத்தில் திருட்டு செயல் புரிவோ ரெல்லாம்
இலக்கியத்தில் புகழ் எழுத்தைப் பொறிக்கின் றூர்கள்

இலக்கியத்தில் மேதை'யென்று திரிவோரெல்லாம்
எழுந்துபாய முடியாத "குதிரை முட்டை!"
இலக்கியத்தைத் தன்வாழ்வாய் ஆக்கிக் கொண்ட;

இலக்குவனூர் போல்மேதை எவனு மில்லை!

தமிழகத்தின் தனிவிளக்காய் இருந்தாய்; அன்பு
தமிழ்இலக்கே, உன்வாழ்வோ கும்மி ருட்டு!
தமிழ்தந்த குறளாசான் ஒளிநூ லுக்குத்
தரத்தக்க பொருள்தந்து சிறப்புப் பெற்ரூய்!

தமிழ்அறியா மனிதனெல்லாம் துரோகி சென்ருல்!
தமிழறியா இராமஇலக் குவனும் துரோகி!
தமிழ்போல வாழ்வாங்கு வாழ்ந்த, சந்தத்
தமிழ்முனிவா, நீதியாகி! என்றும் வாழ்க! !

# அழைக்கின்றேன்

சிவகாமிமணியன்

மூவாத் தமிழின் முப்பாலைப் பிறமொழி
தாவாமல் கற்றுணர்ந்த தமிழோய் வாழ்கவே!
ஓயாம லுழைத்த ஓங்குபுகழ்த் தமிழோய்
பாவொன்று பாடுவதை பாருமல் போயினை
வேகா வெயிலில் நீரொழுகத் தாளாது
தமிழ்காத் துதமிழம் போற்றும் தலைவ!
தேடா நாளில்லை நின்மொழியை நாளும்
பாடாப் பேரில்லை எங்குநீர் சென்ருயோ!

தூவாப் பிள்ளைப் போல்யான் பாவால்
ஓவாது புலம்பு தற்[illegible] நீரும்
மீளாப் பெருந்துயரில் [illegible]ழ்க விட்டு
போயினை[illegible]! சாவது உண்மை எனில்எனை
மேலோர் பே[illegible]றும் மொழிஇதில் பிழையாமல்
இலக்கு பலபெற்று 'இலக்குவனூர்' போல்
நூலோர் போற்றிட தென்தமிழ் தாராய்
ஆகூழே! அழைக்கிறேன்! அழைக்கிறேன்! அழைக்கிறேன்!!

# குறள் குன்றம் "நீ"

வா. மு. குறள்தாசன்

அன்புடைமை அறிவுடைமை அருளுடைமை
பொறைவுடைமை ஆள்வினையுடைமை அவர் காண்

அழுக்காருமை புறங்கூரு கிடக்கை
இன்னு செய்தார்க்கும் இனுயவை கூறல்

பண்புடைமை அடக்கமுடைமை ஊக்கமுடைமை
ஒழுக்கமுடைமை மடஇன்மை "இலக்குவர்"
சான்ருண்மை பகைமை இன்றி நட்புசேர்
தோன்றிடும் "குறள்குன்றம் நீ" புகழ்மாட்சி வளர்ந்து

---

"என் வாழ்க்கைப்போர்" — என்ற தன்வாழ்க்கை வரலாற்றை வெளியிட நிதி உதவிய புரவலர் ஆ. சுப்பிரமணிய பிள்ளை அவர்கட்கு நன்றிப் படையலாக அய்யா இலக்குவனூர் எழுதிய வாழ்த்துரை :—

# நன்றிப் படையல்

அன்பே உருவாய் அனைவர்க் குமுதவும்
நல்லுளங் கொண்டு நாளும் பணிசெயும்
பல்வளச் செல்வர்; பண்பார் நண்பர்,
அரிமா மன்ற அணியுறு புரவலர்.
நகை ஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகையாய்ப் பெற்றுள வாய்மைக் குடியினர்.
புலவரின் தோழர்; பொன்ருப் புகழினர்;

புன்னகை கொண்டு பொன்னகை நல்கும்
ஆறுமு காதங்க மாளிகைக் குரிய
வள்ளலாய் வாழும் வளமார் நாஞ்சில்
குரிசில் சுப்பிரமணியருக்குப்
படைப்பேன், இந்நூலை; பாரோ[illegible]ர் புகழ
வாழ்க பல்லாண்டு வாழ்க
சூழ்க நல்லின்பம்; சூழ வாழவே

---